DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 80/2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 12 |
| Name | திரு. முண்டராஜா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 08.11.2024

**முதல்விசாரணை**

1. நான் நடுவக்குறிச்சியில் குடியிருக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும் அவர் வண்டி டிரைவர் ஆவார்

கடந்த 2016ம் வருடம் நான் ஸ்ரீவைகுண்டம் வந்து கொண்டிருந்த போது தோழப்பண்ணை கோவிலின் அருகே காலை 10.30 மணியளவில் நான் வந்த அரசுபேருந்து 16B ஆனது அதிவேகமாக வந்து பனைமரத்தின் மீது மோதியது. எனக்கு மூக்கில் அடிப்பட்டு எலும்பில் அடிப்பட்டு அது கீழே இறங்கிவிட்டது. பின்பு ஆபரேஷன் செய்தனர். அங்கிருந்தவர்கள் என்னை மீட்டு ஒரு பைக்கில் ஏற்றி ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனையில் சிகிட்சைக்கு சேர்த்தார்கள். பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருநெல்வேலி அரசுமருத்துவமனை அனுப்பிவைத்தார்கள். விபத்தானது பேருந்துஅதிவேகமாக சென்றதாலதான் ஏற்பட்டது. விபத்திற்கு ஆஜர் எதிரிதான் காரணம். போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

2. ஆஜர் எதிரியை இன்றுதான் நீதிமன்றத்தில் வைத்துதான் பார்க்கிறேனா என்றால் பேருந்தில் ஓடியதால் எனக்கு தெரியும் நான்

பேருந்தில் பேருந்தில் நான் எத்தனாவது சீட்டில் இருந்தேன் என்றால் வலதுபக்கம் நடுப்பகுதியில் இருந்தேன். டிக்கெட்டை நான் போலிசார் விசாரணையில கொடுத்தேனா என்றால் அவர்கள் வாங்கிவிட்டு என்னிடம் திரும்பி தந்துவிட்டார்கள். நான் போலிசாரிடம் டிக்கட்டை கொடுக்கவில்லை என்றாலும், அந்த பேருந்திலேயே நான் பயணம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த பகுதி குறுகலான பகுதி என்றால் சரியல்ல. ஒரு வாகனம் செல்லக்கூடிய பாதை என்றால் சரிதான். சம்பவஇடத்தில் இரண்டு பகுதியிலும் சுமார் 10 அடி ஆழமுள்ள பள்ளம் உள்ளது என்றால் சரிதான். கோவில் முன்பு ஒரு திருப்பம் உள்ளது என்றால் இல்லை நேரான ரோடுதான். திருநெல்வேலி டு ஸ்ரீவைகுண்டம் ரோடு வளைந்து வளைந்து செல்லக்கூடிய ரோடு என்றால் சரிதான். அந்த பாதையில் அதிவேகமாக செல்லமுடியாது என்றாலும், 30. 40 கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் செல்லமுடியாது என்றால் சரியல்ல. அதிவேகமாக எதிரி வாகனத்தை ஓட்டி வந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இழப்பீடு ஏதும் வாங்கினேனா என்றால் இல்லை. எனக்கு எந்த ஒரு காயமும் ஏற்படவில்லை என்றாலும் அதனால்தான் நான் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. போலிசார் எத்தனை நாள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இலலை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் நான் எந்த ஒரு வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் சொல்லிக் கொடுத்தன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 80/2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 13 |
| Name | திருமதி. வசந்தா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 08.11.2024

**முதல்விசாரணை**

1. நான் கொங்கராயகுறிச்சியில் குடியிருக்கிறேன். பீடிசுற்றிவருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் அவர் வண்டி டிரைவர் ஆவார்

கடந்த 2016ம் வருடம் 10வது மாதம் நான் ஸ்ரீவைகுண்டம் வந்து கொண்டிருந்த போது தோழப்பண்ணை இசக்கியம்மன் கோவிலின் அருகே காலை 10.30 மணியளவில் நான் வந்த அரசுபேருந்து 16B ஆனது அதிவேகமாக வந்து பனைமரத்தின் மீது மோதியது. எனக்கு கால், கையில் காயம் ஏற்பட்டது. பின்பு நான் திருநெல்வேலி அரசுமருத்துவமனை அனுமதிக்கப்பட்டேன். விபத்தானது பேருந்துஅதிவேகமாக சென்றதாலதான் ஏற்பட்டது. விபத்திற்கு ஆஜர் எதிரிதான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

2. ஆஜர் எதிரியை போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். நான் பேருந்தில் பேருந்தில் நான் எத்தனாவது சீட்டில் இருந்தேன் என்றால் நான் நின்று கொண்டிருந்தேன். டிக்கெட்டை நான் போலிசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால்இல்லை. விபத்து

நடந்த பகுதி குறுகலான பகுதி என்றால் சரிதான். வளைந்து செல்லக்கூடிய பாதை என்றால் சரிதான். சம்பவம் நடந்த காலத்தில் எதிரே வாகனம் வந்தால் வாகனத்தைநிறுத்தி விட்டுதான் வழி கொடுக்கவேண்டும் என்றால் சரிதான்.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 80/2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 14 |
| Name | திருமதி. பொம்மி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 08.11.2024

**முதல்விசாரணை**

1. நான் ஆறாம்பண்ணையில் குடியிருக்கிறேன். பீடிசுற்றிவருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் அவர் வண்டி டிரைவர் ஆவார்

கடந்த 2016ம் வருடம் 10வது மாதம் நான் ஸ்ரீவைகுண்டம் வந்து கொண்டிருந்த போது தோழப்பண்ணை இசக்கியம்மன் கோவிலின் அருகே காலை 10.30 மணியளவில் நான் வந்த அரசுபேருந்து 16B ஆனது அதிவேகமாக வந்து பனைமரத்தின் மீது மோதியது. எனக்கு இடதுபக்கம் மூக்கின் எலும்பு உடைந்தது. அங்கிருந்தவர்கள் என்னை மீட்டு ஒரு பைக்கில் ஏற்றி ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனையில் சிகிட்சைக்கு சேர்த்தார்கள். பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருநெல்வேலி அரசுமருத்துவமனை அனுப்பிவைத்தார்கள். விபத்தானது பேருந்துஅதிவேகமாக சென்றதால் தான் ஏற்பட்டது. விபத்திற்கு ஆஜர் எதிரிதான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** போலிசார் என்னை விசாரித்த போது நான் டிக்கட்டை கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பேருந்தில் பேருந்தில் நான் எத்தனாவது சீட்டில் இருந்தேன் என்றால் டிரைவர் சீட்டிற்கு எதிர்த்தாற்போல் 2,வது 3வது

சீட்டில் உட்க்காந்திருந்தேன். எதிரி எத்தனை வருடமாக 16 பி, வண்டியில் டிரைவராக இருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவம் நடந்த அன்று பார்த்தேன். விபத்து நடந்த பகுதி குறுகலான பகுதி என்றால் சரியல்ல, எனது உறவினர்களுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. அந்த பாதை குறுகலான பாதை என்பதால் எந்த ஒரு வாகனமும் வேகமாக செல்ல இயலாது என்றால் சரியல்ல. அதிவேகமாக எதிரி வாகனத்தை ஓட்டிவந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன்என்றால் சரியல்ல. நான் நிலை தடுமாறி கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் என்னை சம்பவதினத்தன்று விசாரித்தார்கள். ஒருமுறை மட்டும்தான் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இல்லை.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 80/2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 15 |
| Name | திருமதி. கலையரசி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 08.11.2024

**முதல்விசாரணை**

1. நான் ஆறாம்பண்ணையில் குடியிருக்கிறேன். 100 நாள் வேலைக்கு செல்வேன். ஆஜர் எதிரியை தெரியும் அவர் வண்டி டிரைவர் ஆவார்

கடந்த 20–10–2016 ம் வருடம் நான் ஸ்ரீவைகுண்டம் வந்து கொண்டிருந்த போது தோழப்பண்ணை இசக்கியம்மன் கோவிலின் அருகே காலை 10.15, 10,30 மணியளவில் நான் வந்த அரசுபேருந்து 16B ஆனது அதிவேகமாக வந்து பனைமரத்தின் மீது மோதியது. எனக்கு தோள்பட்டையிலும், காலிலும் காயம் ஏற்பட்டது. தோள்பட்டையில் காரை எலும்பு உடைந்துவிட்டது. அங்கிருந்தவர்கள் என்னை மீட்டு ஒரு பைக்கில் ஏற்றி ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனையில் சிகிட்சைக்கு சேர்த்தார்கள். பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருநெல்வேலி அரசுமருத்துவமனை அனுப்பிவைத்தார்கள். விபத்தானது பேருந்துஅதிவேகமாக சென்றதால் தான் ஏற்பட்டது. விபத்திற்கு ஆஜர் எதிரிதான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

2. போலிசார் என்னை விசாரித்த போது எனக்கு தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தைமட்டும் சொன்னேனா என்றால் காலில் ஏற்பட்ட

காயத்தையும் சொன்னேன். நான் டிக்கட்டை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் ஞாபகம்  இல்லை. போலிசார் அடையாளம் காண்பித்துதான் எனக்கு டிரைவரை தெரியுமா என்றால் இல்லை.  அவர் ரெம்ப நாட்களாக அந்த பேருந்தில் டிரைவராக ஓடுவதால் எனக்கு தெரியும். எதிரி பாதுகாப்பாகவும், கவனமாகவும் வண்டி ஓட்டுவதால் ஒரே தடத்தில் நீண்ட நாட்களாக டிரைவராக இருக்கிறார் என்றால்  தெரியாது. விபத்து நடந்த பகுதி குறுகலான பகுதி என்றால் சரிதான். நான் அந்த பேருந்தில் பயணம் செய்யவிலலை என்றால் சரியல்ல. அதனால்தான் நான் போலிசாரிடம் டிக்கட்டை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்  சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல  என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.